திரு. எஸ். ஜே. ராமசாமி : கூட்டுறவு ஸ்டோர் அந்த 150 டன் ரசாயன உரத்தை எடுக்கவில்லை என்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த கூட்டுறவு ஸ்டோரின் நிதி நிலை சரி இல்லை என்பதும் இங்கே கண்டிருக்கிறது. ஆகவே தனிப்பட்டவர்கள் யாராவது அந்த யூரியா ரசாயன உரங்களை பணம் கட்டி எடுத்து விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய முன் வந்தால் அரசாங்கம் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருடைய கோரிக்கையை மாவட்ட கலெக்டருக்கு தெரிவித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பூபதி அவர்கள் ஒரு விளக்க வினா போட வேண்டும் என்றார்கள். அவருக்கு நான் அனுமதி அளிக்க இருந்தேன். அவர் இடத்தில் இல்லாததால் அவர் வந்த பிறகு அனுமதிக்கிறேன்.

7. உரிமைக் குழுவின் அறிக்கை

சிதம்பரநாத நாடார்மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினைமீது குழுவின் பரிந்துரை

புலவர் கா. கோவிந்தன் : (உரிமைக் குழுவின் தலைவர்).—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் பேரவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்கு பற்றி, 17–7–1967-ஆம் நாளன்று இப்பேரவைக்கு அளிக்கப்பட்ட உரிமைக் குழுவின் அறிக்கை, சட்டப் பேரவையின் 191 (பி) விதியின்கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக் குழுவின் அறிக்கை இப்பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்கிற தீர்மானத்தை இந்தப் பேரவை ஏற்றுக்கொள்கிறதா என்பது கேள்வி. ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டப் பேரவையின் 191 (டி) விதியின் கீழ் இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ளுகிறது'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைக்குழுவின் பரிந்துரைகளை இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறதா என்பது கேள்வி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

8. அரசினர் மசோதா

இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967), 1967)

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 19/1967) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 8 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இக்கூட்டு ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட இப்பேரவையின் உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்.
2. திரு. ஆலடி அருணா.